# மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகளின் பேராளர் மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்
## சர்வதேச சமாதான தினம்
**2006 செப்டெம்பர் 21**

சர்வதேச சமாதான தினத்தைக் கொண்டாடும் முகமாக 2006 செப்டம்பர் 21ம் திகதி கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கூடியுள்ள மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகளின் இம்மாநாடு, நாட்டில் தற்போது நிலவும் பாரதூரமான யுத்த சூழ்நிலை மற்றும் அதன் பிரதிபலனாக பாரியளவில் மீறப்படும் மனித உரிமைகள், படுகொலைகள், கடத்தல்கள், சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் ஏற்பட்டுள்ள பாரிய அழிவுகள், வடக்கு மற்றும் கிழக்கில் ஏற்பட்டுள்ள பெரும் இடம்பெயர்வுகள் மற்றும் இடம்பெயர்ந்துள்ள மக்கள் முகம் கொடுக்கும் உணவு, உறைவிடம் மற்றும் பாதுகாப்புகள் தொடர்பான பிரச்சினைகள் அனைத்தையும் கருத்திற்கொள்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள (பிரகடனம் 55/282, 2001) சர்வதேச சமாதான தினமாகிய இன்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் 53/25, 1998 மூலமாக, 2001 இலிருந்து 2010ம் ஆண்டு வரையிலான காலம் உலக சிறுவர்களின் சமாதான கலாசாரம் மற்றும் அஹிம்சை பற்றிய சர்வதேச 10 ஆண்டுகாலமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இங்கு நினைவு கூர்கின்றோம். சமாதானம் என்பது மனிதனின் அடிப்படை உரிமை என்பதை ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்தியிருப்பினும், இன்று நடைபெறும் மோதல்களினால் இவ்வுரிமை யுத்தம் புரிகின்ற பிரிவினர்களால் பறிக்கப்பட்டுள்ளது. மிகப் பாரியளவிலான சிறுவர்களும் துன்பத்திற்குள்ளாகி வருகின்றனர்.

**இன்நிலையில், இங்கு கூடியிருக்கும் இம்மாநாடு கீழ்க்கானும் கோரிக்கைகளை யுத்தம் புரியும் பிரிவினர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் மற்றும் சர்வதேச சமூகத்திற்கும் முன்வைக்கின்றது.**

- யுத்தம் புரிகின்ற சகல பிரிவினரும் மக்களின் உயிர்வாழும் மற்றும் சமாதானத்துடன் வாழும் உரிமைக்குக் குந்தகம் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும்.
- பாரியளவில் மக்கள் இடம்பெயர்கின்ற, உயிர்களுக்கும் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கும் யுத்த முனைப்புக்களைக் கைவிட்டு சமாதானமானதும் அஹிம்சை ரீதியானதுமான தீர்விற்காக யுத்தம் புரியும் தரப்பினர் முன்வர வேண்டும்.
- சிறுவர்களை யுத்தத்தில் இழுத்துவிடாமலும் அவர்களது உயிர்களுக்கு ஆபத்து விளைவிக்காதவாறு செயற்பட யுத்த தரப்பினர் வகை செய்தல் வேண்டும்.

**இம்மகாநாடு இலங்கையில் நடைபெறும் யுத்தம் தொடர்பாகக் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைக்கின்றது.**

- அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் உடனடியாகவே தமது யுத்த முனைப்புக்களைக் கைவிட்டு தமக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும்.
- அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் அமைந்த இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கம் முன்வைத்தல் வேண்டும் என்பதுடன் அதற்கான பேச்சுவார்த்தையை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் ஆரம்பித்தல் வேண்டும்.
- நாட்டில் பொதுவாகவும் குறிப்பாக வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்படும் பாரிய மனித உரிமை மீறல்களை நிறுத்துவதுடன் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுத்தருவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- இந்நாட்டில் பேச்சுவார்த்தையூடான சமாதானத்தைக் கொண்டுவரும் முயற்சியில் இந்நாட்டில் சகல மக்கள் பிரிவினதும் தமது அர்ப்பணிப்புடனான பங்களிப்பினைச் செய்வதுடன் தமது முழுமையான ஆதரவையும் பெற்றுத்தரல் வேண்டும்.
- இலங்கையில் நடைபெறும் யுத்தத்தை உடனடியாகவே முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்காகவும் அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் மீது அழுத்தங்களைக் கொண்டுவருவதற்காக சர்வதேச சமூகம் தனது பூரணமான பங்களிப்பினைப் பெற்றுத்தரல் வேண்டும்.

**இம்மாநாட்டில் 17 மாவட்டங்களைச் சேர்ந்த, சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 350 பேராளர்கள் இப்பிரகடனத்தை ஏகமனதாக அங்கீகரித்தனர்.**

தேசிய சமாதான பேரவை
12/14, புராண விகாரை பாதை, கொழும்பு 6
தொலைபேசி : 2818344,2854127,2809348 பக்ஸ் : 2819064
மின்னஞ்சல் : peace2@sri.lanka.net இணையம் : www.peace-srilanka.org